NP

**இரண்டாம் இடை பருவ பொதுத்தேர்வு - நவம்பர் - 2019**

Reg. No. | | | | | | |

**பத்தாம் வகுப்பு**

**தமிழ்**

நேரம் : 1.30 மணி | மொத்த மதிப்பெண்கள் : 50

**பிரிவு - I**

7 x 1 = 7

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. மேன்மை தரும் அறம் என்பது ...............
   அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது
   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
3. தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
   ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
   ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ...............
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
   ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
   ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
5. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
6. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ...............
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
7. வெண்பாக்களின் வகைகள் ...............
   1) மூன்று ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) நான்கு

**பகுதி - II**

**பிரிவு - I**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2 x 2 = 4

8. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக?
9. அவையம் - குறிப்பு வரைக.
10. அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை குறித்து ஏணிச்சேரி முடமோசியார் புறநானூற்றில் குறிப்பிடுவது யாது?

**பிரிவு - II**

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** 3 x 2 = 6

11. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
12. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
13. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம்
14. கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
    உள்வார்த்தை உடம்பு தொடாது.
    அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.
    ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக - கொள்க, குரைக்க

www.Padasalai.Net

## பகுதி - III

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 6 x 3 = 18

15. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'
இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
16. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
17. 'பகர்வனர் திரிதரு நகரவீதியும்,
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருங்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்'
அ) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
இ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?
18. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?
19. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

*(அல்லது)*

வஞ்சப் புகழ்ச்சி அணியை சான்றுடன் விளக்குக.
20. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகீட்டு வாய்ப்பாடு எழுதுக.
'தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்'

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** 3 x 5 = 15

21. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
22. எம்.எஸ்.சுப்புலெட்சுமி பற்றி நீ அறிந்தவற்றை விரிவாக எழுதுக.
23. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

-------- x --------

www.Padasalai.Net